**செய்தி வெளியீடு எண்:42** **நாள்:22.01.2021**

## <u>செய்தி வெளியீடு</u>

தமிழக அரசின் மாண்புமிகு கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் அவர்கள் மத்திய அரசின் மாண்புமிகு மீன்வளம், கால்நடை பராமரிப்பு (ம) பால் வளம் அமைச்சர் அவர்களை **22.01.2021** அன்று சந்தித்து கால்நடை பராமரிப்பு துறையின் நோய் கட்டுபடுத்துதல் நடவடிக்கை, இனப்பெருக்க வசதி, உள்கட்டமைப்பு, உயிர் பாதுகாப்பு ஆய்வு கூடங்கள், தீவன மேலாண்மை ஆகியவற்றை மேம்படுத்திட ரூ.**1,254.22** கோடியும், தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைகழகத்தின் வாயிலாக உள்நாட்டு நாய் இனங்களை பாதுகாத்திட, தீவனத்தை சிறந்த முறையில் உபயோகத்திட, உள்கட்டமைப்பை மேம்படுத்திட ரூ.209.64 கோடியும் வழங்க மத்திய அரசிடம் நிதி உதவி கோரினார்.

தமிழக அரசின் மாண்புமிகு கால்நடை பராமரிப்பு துறை அமைச்சர், முதன்மை செயலாளர், கால்நடை பராமரிப்பு, பால்வளம் (ம) மீன்வளத்துறை மற்றும் இயக்குநர் கால்நடை பராமரிப்பு மற்றும் மருத்துவப்பணிகள் அவர்கள் மத்திய அரசின் மாண்புமிகு மீன்வளம், கால்நடை பராமரிப்பு மற்றும் பால்வளம் அமைச்சர் அவர்களை சந்தித்து தமிழ்நாடு கால்நடை பராமரிப்பு துறை மற்றும் தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைகழகத்திற்கு கூடுதல் நிதி ஒதுக்கீட்டினை அளிக்குமாறு கோரினார்கள்.

தமிழக அரசின் மாண்புமிகு கால்நடை பராமரிப்பு துறை அமைச்சர் விவசாயிகளின் பொருளாதாரத்தை மேம்படுத்திட கால்நடை பராமரிப்புத்துறை வாயிலாக எடுக்கப்பட்டு வரும் பல்வேறு நடவடிக்கைகளை குறித்து எடுத்துரைத்தார்.

கால்நடைகளை நோய்களின் தாக்கத்திலிருந்து தடுக்க எடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகளை தமிழக அரசின் மாண்புமிகு கால்நடை பராமரிப்பு துறை அமைச்சர் அவர்கள் விரிவாக விவரித்து மத்திய அரசு உதவி பெறும் திட்டமான கால்நடை நலன் மற்றும் நோய் தடுப்பின் (LH&DC) கீழ் மத்திய அரசின் பங்கான

ரூ.3.47 கோடியை விடுவிக்க கேட்டுக்கொண்டார். மாநிலத்தில் கோழியினங்களின் ஏற்றுமதியை அதிகரிக்கும் பொருட்டு புதிய 3+ தரம் கொண்ட உயிரியல் பாதுகாப்பு ஆய்வகம் (BSL 3+) தமிழகக்தில் நிறுவிட அவசியத்தினை தமிழக அரசின் மாண்புமிகு கால்நடை பராமரிப்பு துறை அமைச்சர் அவர்கள் வலியுறுத்தி இதற்கென ரூ.103.45 கோடி நிதியினை வழங்குமாறு கேட்டுக்கொண்டார். மேலும், மாநிலத்தில் கோமாரி நோய் தடுப்பு பணியை தடையின்றி செயல்படுத்திட தேவையான கோமாரி நோய் தடுப்பூசி தங்குதடையின்றி கிடைக்க ஏதுவாக, கோமாரி நோய் தடுப்பூசி உற்பத்தி ஆய்வகத்தினை இராணிப்பேட்டையில் உள்ள கால்நடை நோய் தடுப்பு மருந்து நிலையத்தில் ரூ.146.19 கோடியில் நிறுவ மத்திய அரசிடம் கோரினார்.

தமிழக அரசின் மாண்புமிகு கால்நடை பராமரிப்பு துறை அமைச்சர் அவர்கள் கால்நடைகளில் இனப்பெருக்கத்தினை அதிகரிக்க எடுக்கப்பட்ட பல்வேறு நடவடிக்கைகளை குறித்து விளக்கினார். கால்நடைகள் / எருமைகளின் மரபணு தகுதியை மேம்படுத்துவதற்காக பல்வேறு திட்டங்களுக்கான கருத்துருகளையும் சேர்த்து, ராஷ்ட்ரிய கோகுல் மிஷன் (Rashtriya Gokul Mission) கீழ் தற்போது செயல்படுத்தபட்டு வரும் திட்டங்கள் மற்றும் கூடுதல் திட்டங்களுக்கு ரூ.64.54 கோடி கோரப்பட்டுள்ளதாக தெரிவித்தார். மேலும், கால்நடை பராமரிப்பு துறையின் மூலம் கால்நடைகளின் ஆரோக்கியம் மற்றும் இனப்பெருக்க திறனை மேம்படுத்தும் நோக்கத்துடன் ரூ.69.92 கோடியில் தாது உப்பு கலவை உற்பத்தி ஆலையை நிறுவவும், ரூ.87.33 கோடியில் உறைவிந்து உற்பத்தி நிலையத்தினை வலுப்படுத்தவும் கால்நடை பராமரிப்புத்துறைக்கு நிதி உதவி வழங்குமாறு கோரினார். இத்துடன், கால்நடைகளுக்கு சமச்சீர் தீவனம் கிடைக்க வழிவகை செய்து அதன் மூலம் கால்நடைகளின் உற்பத்தி திறனை மேம்படுத்திட, முழுமையான கலப்பு தீவன ஆலையை (Total Mixed Ration Plant) ரூ.2.54 கோடியில் நிறுவ மத்திய அரசிடம் நிதி கோரினார்.

தமிழக அரசின் மாண்புமிகு கால்நடை பராமரிப்பு துறை அமைச்சர் அவர்கள் கால்நடை நிலையங்களின் உள் கட்டமைப்பு வசதிகளை

மேம்படுத்துதலின் தேவைகளை எடுத்துரைத்து, புதிய கால்நடை நிலையங்களை கட்டவும், கூடுதல் உள் கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தவும் மற்றும் சமூக கால்நடை காப்பிடங்கள் (Community Cattle Shelters) கட்டவும், ரூ.311.31 கோடி வழங்க கேட்டுக்கொண்டார். மேலும், கால்நடை நிலையங்களில் நோய் கண்டறிதல் வசதிகளை மேம்படுத்திட ரூ.22.94 கோடியும், கால்நடைகளுக்கான மருந்துகளை சேமிக்கும் பொருட்டு மண்டல அளவிலான சேமிப்பு கிடங்குகள் நிறுவ ரூ.63.65 கோடி வழங்க மத்திய அரசிடம் கோரினார்.

தமிழகத்தின் நாட்டுக்கோழி இறைச்சியின் தேவைகளை பூர்த்தி செய்யும் பொருட்டு, தமிழக அரசின் மாண்புமிகு கால்நடை பராமரிப்பு துறை அமைச்சர் அவர்கள் தீவன ஆலை, கோழிக்குஞ்சு பொறிப்பகம் மற்றும் இறைச்சி கூடம் உள்ளடக்கிய நவீனமயமாக்கப்பட்ட நாட்டுக்கோழி இனப்பெருக்க பண்ணை ரூ.102.76 கோடியில் அமைக்க கோரினார். மேலும் கால்நடை மற்றும் விலங்கின அறிவியலுக்கான ஒருங்கிணைந்த உயர் ஆராய்ச்சி நிலையத்திற்கான கூடுதல் நிதியாக ரூ.185.71 கோடியும் மத்திய அரசிடம் வழங்க கோரினார். தமிழகத்தில் உள்ள அனைத்து ஊராட்சி ஒன்றியங்களுக்கும் நடமாடும் கால்நடை மருத்துவ சேவைகளை (Mobile veterinary unit) வழங்கிட ரூ.90.09 கோடி வழங்க கோரினார்.

தமிழக அரசின் மாண்புமிகு கால்நடை பராமரிப்பு துறை அமைச்சர் அவர்கள் தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலை கழகத்தின் வாயிலாக செயல்படுத்தப்பட்டு வரும் பல்வேறு நடவடிக்கை விளக்கி உள்நாட்டு நாய் இனங்களை பாதுகாத்திடவும், தீவனத்தை சிறந்த முறையில் உபயோகத்திடவும், எருமைகளின் இனப்பெருக்கத்தினை மேம்படுத்தவும், கால்நடை உள் கட்டமைப்பை மேம்படுத்திடவும் மற்றும் கால்நடை சந்தை தகவல் மேலாண்மையை மேம்படுத்திடவும் ரூ.209.64 கோடி வழங்க மத்திய அரசிடம் கோரினார்.

இவை அனைத்தையும் உள்ளடக்கிய ரூ.1,463.86 கோடி மதிப்பிலான கோரிக்கை மனுவை தமிழக அரசின் மாண்புமிகு கால்நடை பராமரிப்பு துறை அமைச்சர் அவர்கள் மத்திய அரசின் மாண்புமிகு மீன்வளம், கால்நடை பராமரிப்பு மற்றும் பால்வளம் அமைச்சர் அவர்களிடம் வழங்கி, மத்திய அரசு மாநில அரசிற்கு நிதி உதவியினை விடுவித்து மேலும் கால்நடை பராமரிப்பினை ஊக்குவித்து விவசாயிகளின் வாழ்வாதாரத்தினை மேம்படுத்திடவும், மாநிலத்தின் பொருளாதாரத்தை அதிகரிக்கவும் கோரினார். முதன்மை செயலாளர், கால்நடை பராமரிப்பு, பால்வளம் (ம) மீன்வளத்துறை மற்றும் இயக்குநர், கால்நடை பராமரிப்பு மற்றும் மருத்துவப்பணிகள் அவர்களும் உடன் இருந்தார்கள்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**